**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No.296 /2009**

Deposition of **D.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 20.03.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : R. துரைசாமி Father's Name : ராமசாமி

துவக்க நேரம்: 05.06 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**1-**ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:

1) வாதி ஜோதி என்பவர் எனது அம்மா என்றால் ஆமாம். நான் கடந்த 06.03.2002-ல் நான், 1-ம் பிரதிவாதி பெயரில் எழுதிக்கொடுத்த கிரயப்பத்திரம் செல்லாது என்றும் அந்த ஆவணம் எனது தாயாரை கட்டுப்படுத்தாது என்றும் இந்த தாவாவை எனது தாயார் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

2) தாவா சொத்து ச. எண்.265/5டி மற்றும் 265/5பி என்றால் சரிதான். நான் கடந்த 06.03.2002-ல் 1-ம் பிரதிவாதி பெயரில் கிரயப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். என்னை மிரட்டி எழுதிவாங்கியுள்ளார். தாவா சொத்தை யாரிடம் கிரயம் பெற்றேன் என்றால் ஒரு ராஜகோபால் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றேன்.

3) தாவா சொத்து ச. எண்.265/5டி மற்றும் 265/5பி பொறுத்து நான் கடந்த 17.02.1999-ல் ஒரு பிரபாகரன் என்பவரிடம் கிரைய உடன்படிக்கை

ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரிதான். அது என்னிடம் காட்டப்படும் ஆவணம் என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கை பத்திரம் பி.வா.த.சா.ஆ. **25** ஆகும். (1-ம் பிரதிவாதி தரப்பில் இந்த ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது).

4) நான் கடந்த 10.01.2000 தேதியில் மேற்கண்ட கிரைய உடன்படிக்கை பத்திரத்தை நான் ரத்து செய்துவிட்டேன் என்றால் சரிதான். கிரைய உடன்படிக்கை ரத்து பத்திரம் பி.வா.த.சா.ஆ.**26** ஆகும். (1-ம் பிரதிவாதி தரப்பில் இந்த ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது).

ஆவணங்கள் பரிசீலிக்க வேண்டி, குறுக்கு விசாரணை ஒத்தி வைக்க வேண்டப்பட்டது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு, குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 05.15 P.M.

| |
|---|
| Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct<br><br>sd/-S.Munusamy<br>Additional District Munsif(F.A.C), Attur |

Typed by Selvi. C. Sasikala - O.S. No.296/2009, Dt.20.03.2025.